Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 17 2025

செவ்வாய்க்கிழமை 17, ஜூன் | ஒளி: 10 கதிர் 262 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# மருத்துவர் மாட்டினார்

மட்டக்களப்பின் கிராண் பகுதியில் மருந்தகம் நடத்தி வந்த மருத்துவர் ஒருவர், மனநலம் பாதிக்கக்கூடிய மருந்துகளை இளைஞர்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு பிராந்திய உணவு மற்றும் மருந்து ஆய்வாளர்கள் மற்றும் பொலிஸ் சிறப்புப் படையினர் கிராண் பகுதியில் கூட்டுச் சோதனை நடத்தி, கிடைத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

மருந்துச் சீட்டு இல்லாமல் இளைஞர்களுக்கு PREGAB 150mg வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் மருந்தகத்தின் MBBS தகுதி பெற்ற மருத்துவர் கைது செய்யப்பட்டார்.

# விராய் கெலி பல்தசார் கொழும்பு மேயர்

## காலி பல்தசார் 61 வாக்குகள் | ரிசா சாரூக் 54 வாக்குகள்



நாட்டின் மிகப்பெரிய உள்ளூராட்சி மன்றமாக கொழும்பு மாநகர சபையை யார்? கைப்பற்றுவர் என்று பெரும் சந்தேகமாக இருந்த கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றி, மேயர் பதவியையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

கொழும்பு மாநகர சபைக்கான மேயரை தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு, மேல் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் சாரங்கிகா ஜெயசுந்தர தலைமையில், திங்கட்கிழமை (16) காலை 9.30க்கு நடைபெற்றது. ஆரம்பத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. எனினும், இறுதியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராக தேசிய மக்கள் சக்தியின் (NPP) விராய் கெலி பல்த்தசார் 61 வாக்குகளைப் பெற்று புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் (SJB) மேயர் வேட்பாளர் ரிசா சாரூக் 54 வாக்குகளைப் பெற்றார்.

மே 6 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கொழும்பு மாநகர சபை இன்று காலை அதன் தொடக்க அமர்வுக்குக் கூடியது. மேயரைத் தேர்ந்தெடுப்பது நிகழ்ச்சி நிரலில் முதல் அம்சமாகத் திட்டமிடப்பட்டது.

தேர்தலில் எந்தக் கட்சிக்கும் முழுமையான பெரும்பான்மை கிடைக்காததால், மேயரைத் தேர்ந்தெடுக்க ரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராக ஹேமந்த குமார தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களை வென்றி கொண்டது. ஐக்கிய மக்கள் சக்தி 29 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆசனங்களைப் பெற்றது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 5 ஆசனங்களையும்,

தொடர்ச்சி P2

# அனுரவுக்கே ஜீவன் ஆதரவு



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியால் ஆட்சி அமைக்க முடியாத நிலையில் உள்ள , உள்ளூராட்சி மன்றங்களில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவளிக்க கட்சித் தலைமை முடிவு செய்துள்ளதாக காங்கிரஸின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “எங்களுக்குள் கறுப்பு ஆடுகள்”



கொழும்பு மாநகர சபைக்கு புதிய மேயரை தேர்ந்தெடுக்கும் வாக்களிப்பின் போது, மேல் மாகாண உள்ளூராட்சித் துறை ஆணையாளர் நியாயமற்ற முறையில் நடந்து கொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தி (SJB) கட்சியின் மேயர் வேட்பாளர் ரிசா சாரூக் குற்றம் சாட்டியுள்ளார். இந்த வாக்களிப்பில், ரிசா சாரூக் 54 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தார்.

தனது கட்சியால் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளை மீறி, ஆணையாளர் சாரங்கிகா ஜெயசுந்தர ரகசிய வாக்கெடுப்பு மூலம் வாக்கெடுப்பை நடத்த தன்னிச்சையான முடிவை எடுத்ததாக சாரூக் கூறினார். “இரகசிய வாக்கெடுப்பு அல்லது திறந்த வாக்கெடுப்பு மூலம் வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்று ஆணையாளர் ஆரம்பத்திலேயே, அறிவித்தார், ஆனால் நடைமுறையின்படி, அந்த முறை உறுப்பினர்களின் பெரும்பான்மை முடிவால் தீர்மானிக்கப்பட வேண்டும்,” என்றும் சாரூக் கூறினார்.

தொடர்ச்சி P2



சர்வதேச நாணய நிதியம்

# “பங்காளியாக இருக்கும்”

## ஜனாதிபதியிடம் கலாநிதி கீதா கோபிநாத் தெரிவிப்பு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் உள்ளிட்ட தூதுக்குழுவினரை ஜனாதிபதி செயலகத்தில் திங்கட்கிழமை (16) முற்பகல் சந்தித்தார்.

இலங்கைக்கு அண்மையில் நிதி நெருக்கடியிலிருந்து மீள, வழிகாட்டிய சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா அண்மையில் விதித்த வரிகளைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 25 சதவீதம் அமெரிக்காவிற்குச் ஏற்றுமதி செய்யப்படுவதால், அவ்வாறு வரி அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் குறிப்பிட்டார்.

உலகளாவிய நெருக்கடிகள் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்தும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இந்த சவால்களை செயற்திறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

# ஏறாவூர் நகர சபை மு.கா. வசமானது



■ நூருல் ஹுதா உமர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபைக்கான தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரை தெரிவு செய்யும் வகையிலான அமர்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இன்று(16) காலை நடைபெற்றது.

17 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைக் கொண்ட ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் உப- தவிசாளர் தெரிவுக்கான இன்றைய அமர்வில் 16 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கலந்து கொள்ளவில்லை.

இதன்போது, தவிசாளரை தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஏறாவூர் அமைப்பாளர் ஒருங்கிணைப்பு செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மட் சாலி நழீம் முன்மொழிந்து வழிமொழியப்பட்டார்.

அதனைப் போன்று ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பர்லின் பெயரும் முன்மொழிந்து வழிமொழியப்பட்டது.

தொடர்ச்சி P2



# நெதன்யாகுவின் மகனின் திருமணம் ஒத்திவைப்பு

இஸ்ரேல்-ஈரான் இடையேயான போர் பதற்றம் காரணமாக, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் மகன் அவ்னர் நெதன்யாகுவின் திருமணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக அவ்னெர் நெதன்யாகு-அமித் யார்தேனி ஜோடியின் திருமணம் திங்கட்கிழமை (16) அன்று நடைபெறுவதாக இருந்தது.

தொடர்ச்சி P2

# தயாவின் 3 நிறுவனங்களை ஏலத்தில் விடுமாறு தீர்ப்பு



முன்னாள் அமைச்சர் தயா கமகேவுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் மூன்று நிறுவனங்களின் பொது ஏலத்தை நடத்த கொழும்பு வணிக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, தயா குழுமம் லிமிடெட், தயா அப்பரல் எக்ஸ்போர்ட்டர் (பிரைவேட்) லிமிடெட், ஒலிம்பஸ் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களே இவ்வாறு ஏலத்தில் விடப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

# முதியோர் துஷ்பிரயோகம்: புகாரளிக்க வாட்ஸ்அப்



பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெரியவர்கள் மற்றும் தங்குமிடம் தேவைப்படும் பெரியவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் ஒரு வாட்ஸ்அப் எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.

பிள்ளைகளால் புறக்கணிக்கப்படும் பெரியவர்களுக்கான பராமரிப்பு கோரிக்கைகள் போன்ற பிரச்சினைகள் குறித்து தெரிவிக்க 0707 89 88 89 இந்த வாட்ஸ்அப் எண்ணைப் பயன்படுத்தலாம் என்று முதியோருக்கான செயலகம் கூறுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஆம் திகதியை "உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினம்" என்று அறிவித்துள்ளது, அதே நேரத்தில்,

தொடர்ச்சி P2

# 88 நபர்களின் சொத்துக்கள் முடக்கம்



நாட்டின் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் நிதி மோசடிகளுடன் தொடர்புடைய சுமார் 88 நபர்களின் சொத்துக்களை முடக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 26 பேர் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான சந்தேக நபர்களாகவும், மீதமுள்ளவர்கள் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளைச் செய்தவர்களாகவும் கருதப்படுகின்றனர்.

முடக்கப்பட்ட சொத்துக்களில் நிலம், வீடுகள், வங்கிக் கணக்குகள், வாகனங்கள், நகைகள், வணிக வளாகங்கள் மற்றும் நெல் வயல்கள் ஆகியவை அடங்கும் என பொலஜஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத சொத்துக் குவிப்பைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட பல சமீபத்திய சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# விராய் கெலி பல்தசார் கொழும்பு மேயர்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு, 3 ஆசனங்களையும், அனைத்து மக்கள் சக்தி, ஐக்கிய அமைதி முன்னணி, சுயேச்சைக் குழு- 4 மற்றும் சுயேச்சைக் குழு0 5 ஆகியன தலா 2 ஆசனங்களையும், சுயேச்சைக் குழு-2, சுயேச்சைக் குழு- 1, ஜனநாயக தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, தேசிய மக்கள் கட்சி மற்றும் ஐக்கிய குடியரசுக் கட்சி ஆகியன தலா 1 ஆசனத்தையும் வென்றன.

117 இடங்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை நிலைநாட்ட, ஒரு கட்சி குறைந்தது 59 இடங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், 48 ஆசனங்களை வெற்றி கொண்ட தேசிய மக்கள் சக்தி மேயர் பதவியைத் தனதாக்கிக்கொண்டது.

கொழும்பு மாநகர சபையின் முதலாவது முதல்வராக சார்லஸ் பீட்டர் லேயார்ட் 1866ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார். சுதந்திரத்திற்குப் பின்னர் 1950ஆம் ஆண்டில் முதல் மேயராக கலாநிதி குமாரரத்னம் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1954 ஆம் ஆண்டில் கலாநிதி என்.எம்.பெரேரா மாநகர முதல்வராக நியமிக்கப்பட்டார்.

1956ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி முதல் முறையாக கொழும்பு மாநகர சபையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அக் கட்சி சார்பில் பி.ஏ.சுகததாச முதல்வரானார்.

அதன் பின்னர், 2006 வரை தொடர்ந்து மாநகர சபையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஐ.தே.கவின் வேட்புமனுக்கள் அந்த ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நிராகரிக்கப்பட்டன.

கண்ணாடி சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு, ஐ.தே.கவின் ஆதரவுடன் மாநகர சபையை வென்றதுடன் அதன் தலைவர் உவைஸ் முகமது முதல்வராகத் தெரிவானார்.

பின்னர், இறுதியாகக் கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐ.தே.க. மீண்டும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் வெற்றிபெற்றதுடன், உறுப்பினர் திருமதி ரோசி சேனநாயக்க முதல்வரானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அனுரவுக்கே ஜீவன் ஆதரவு



இரு கட்சிகளுக்கும் இடையே பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகவும், கலந்துரையாடல்களின்படி, நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் தெனியாய கொட்டபொல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை கைப்பற தனது கட்சியிலிருந்து உள்ளூராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் ஆதரவு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கு உள்ளான உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தலைவர்களை மீண்டும் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று தேசிய மக்கள் சக்தி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கையின்படி, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள 4 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் பதவியை மட்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும், துணைத் தலைவர் பதவியை தேசிய மக்கள் சக்திக்கும் வழங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து நான்கு மாகாண சபைகளின் புதிய தலைவர்களை நியமிப்பது குறித்து தனது கட்சியின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கொட்டகலையில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில், கட்சியின் பொதுச் செயலாளர் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தலைமையில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கான சிறப்புக் கூட்டம் திங்கட்கிழமை (16) நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், கலந்துகொண்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்றங்களில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு பல வெற்றிகளைப் பெற்றதாகவும், அதன்படி, பல உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்க்க முடிவு செய்துள்ளதாகவும் உறுப்பினர்களிடம் கூறினார்.

# "எங்களுக்குள் கறுப்பு ஆடுகள்"



வாக்களிக்கும் முறை குறித்த முடிவும் ரகசிய வாக்கெடுப்பு மூலம் எடுக்கப்படும் என்று ஆணையாளர் ஒருதலைபட்சமாக அறிவித்ததாகவும், இதனால் முழு தேர்தல் செயல்முறையும் அந்த வழியில் தொடர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஆளும் கட்சி ரகசிய வாக்கெடுப்புக்கு அழுத்தம் கொடுக்க திட்டமிட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிந்த பிறகு, தனது குழுவிற்குள் கவலைகள் எழுந்ததாகவும் சாரூக் மேலும் கூறினார்.

"எங்கள் குழுவில் சில கறுப்பு ஆடுகள் இருந்துள்ளன. இது அனைத்து இடங்களிலும் பொதுவான விடயம். நம்பிக்கையுடன் களத்தில் இறங்கினோம். ஆனாலும் இது நம்பிக்கை உடைக்கப்பட்ட தருணம். இருப்பினும் நாம் பின்வாங்க மாட்டோம்" என சாரூக் மேலும் தெரிவித்தார்.



# நெதன்யாகுவின்...

இந்த சூழலில் இஸ்ரேல்-ஈரான் நாடுகள் 3ஆவது நாளாக தீவிர தாக்குதலில் ஈடுபட்டு வருவதால் அங்கு போர் ஏற்படும் அபாயம் நிலவி வருகிறது.

மேலும், காசாவில் இஸ்ரேலியர்கள் பணயக்கைதிகளாக உள்ள நிலையில், நாட்டின் பிரதமர் கொண்டாட்டத்தில் ஈடுபடுவதா என விமர்சனங்கள் எழுந்தன. இதன் காரணமாக, நெதன்யாகு மகனின் திருமணத்தை தள்ளி வைக்க முடிவு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.



# "பங்காளியாக இருக்கும்"

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் வர்த்தக உறவு, குறிப்பாக இலங்கையின் 23 சதவீத ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு அனுமதி வழங்கும் GSP+ வர்த்தகச் சலுகை பற்றியும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டன.

முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பது பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி மக்களை மையமாகக் கொண்டது என்றும், மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கையில் தனக்குக் கிடைத்த அமோக வரவேற்புக்கு கோபிநாத், ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததுடன், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் இரண்டிலும் அரசாங்கத்திற்குக் கிடைத்த வலுவான மக்கள் ஆதரவு, அத்தியாவசிய மறுசீரமைப்புகளைச் செயல்படுத்த அரசாங்கத்திற்கு பலமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அடைந்த பொருளாதார வளர்ச்சியையும், மிக அதிக பணவீக்க விகிதத்திலிருந்து பணவீக்க விகிதம் குறைந்ததையும் குறிப்பிட்ட அவர், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பாராட்டினார்.

அதேபோன்று, அரச நிர்வாக மறுசீரமைப்புகளில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய அவர், இந்த முயற்சிகளை நிலைநிறுத்தி விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் மீட்சி செயல்பாட்டில், சர்வதேச நாணய நிதியம் உறுதியான பங்காளியாக இருக்கும் என்று திருமதி கோபிநாத் உறுதியளித்தார்.

# ஏறாவூர் நகர...



இதன் பிரகாரம் தவிசாளர் தெரிவு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இதன்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட எம்.எஸ். நழீமுக்கு ஆதரவாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 07 உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்த 01 உறுப்பினர்களும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 01 உறுப்பினர் என மொத்தமாக 09 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த எம். எஸ். சமீமுக்கு (பர்லின்) ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த 04 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த 02 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 01 உறுப்பினரும் 07 உறுப்பினர் வாக்களித்தனர்

இதன் பிரகாரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.நழீம் 02 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். ஏறாவூர் நகர சபையின் அதிகாரம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வசமானது. எம்.எஸ்.எம்.நழீம் தவிசாளராக அரியாசனம் ஏறினார்.

# தயாவின் 3 நிறுவனங்களை ஏலத்தில் விடுமாறு தீர்ப்பு



குறித்த நிறுவனங்கள் ஜூலை மாதம் 2ஆம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விடப்படும் என்றும் கொழும்பு வணிக நீதிமன்றத்தின் பதிவாளர் மற்றும் பிரதி நிதியாளர் தெரிவித்துள்ளார்.

பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ஃபைனான்ஸ்' நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.104,229,342 தொகையை வசூலிக்கும் நோக்கில் மூன்று நிறுவனங்களையும் பொது ஏலத்தில் விட உத்தரவிடப்பட்டுள்ளது.

பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் ஃபைனான்ஸ்' நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.108,309,342 தொகையில் சுமார் ரூ.4,080,000ஐ பிரதிவாதிகள் செலுத்தியுள்ளதால், மீதமுள்ள தொகையை வசூலிக்கும் நோக்கில் 2022 நவம்பர் 10, அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி ஏலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# முதியோர் துஷ்பிரயோகம்: புகாரளிக்க வாட்ஸ்அப்



கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட முதியோருக்கான தேசிய செயலகம், முதியோர் சமூகத்திற்காக 'சரணா' என்ற இந்த ஆதரவு சேவையைத் தொடங்கியுள்ளது.

இந்த நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில், வாட்ஸ்அப் எண்ணின் அதிகாரப்பூர்வ வெளியீடு அமைச்சின் வளாகத்தில் கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சர் டாக்டர் உபாலி பன்னிலகே மற்றும் துணை அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ ஆகியோரின் தலைமையில் திங்கட்கிழமை (16) அன்று நடைபெற்றது.

# 88 நபர்களின்...

டிசெம்பர் 2024 மற்றும் ஜனவரி 2025க்கு இடையில், போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய 15.25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்பட, சுமார் 22.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள குற்றவியல் சொத்துக்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

மே மாதம், பயங்கரவாத அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முடக்குவதாக அறிவிக்கும் அசாதாரண வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது.

பாதுகாப்புச் செயலாளர், ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தா இந்த வர்த்தமானியை வெளியிட்டார்.

புதிய உத்தரவின்படி, 15 அமைப்புகள் மற்றும் 117 நபர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் முடக்கப்பட இருந்தன.

முன்னதாக, குறைந்தது 58 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை அடையாளம் கண்டுள்ளதாகவும் அதில் முக்கிய நபர்கள் வெளிநாட்டிலிருந்து செயல்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்,

சமீபத்தில் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட புதிய பணமோசடி தடுப்புச் சட்டம், சட்டவிரோத வருமானத்தைக் கைப்பற்றவும், திருடப்பட்ட சொத்துக்களை மீட்டெடுக்கவும் சட்ட அமலாக்கத்திற்கு மேலும் அதிகாரம் அளிக்கிறது.

முடக்கப்பட்ட செல்வத்தின் மூலத்தைக் கண்டறிந்து சட்ட நடவடிக்கை எடுக்க குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை வழிநடத்துகின்றன.

### காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர்

# ஆர்ப்பாட்டத்தில் அத்துமீறி ரகளை

■ கஜானா சந்திரபோஸ்




அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம், தாயகச் செயலணியினர், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம், திருக்கோயில் தம்பிலுவில் பொதுச்சந்தை முன்பாக திங்கட்கிழமை (16) அன்று முன்னெடுக்கப்பட்டது.

"செம்மணி மனித புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கு சர்வதேச மேற்பார்வையுடன் நீதி விசாரணை வேண்டும்", "உகந்தை முருகன் ஆலய வளாகங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற புத்தர் சிலை அகற்ற வேண்டும்", "மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல் தர விவகாரம்", "வட்டமடு மேய்ச்சல்தரை", "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களுக்கான நீதி", "யுத்தத்தில் கொல்லப்பட்ட உறவுகளுக்கான நீதி", "அரசியல் கைதிகள் விடுதலை", "பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குதல்", "சட்டவிரோத காணி அபகரிப்புகள்" போன்ற பல விடயங்களை முன்னிறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

திருக்கோவில் பிரதேச சபை தவிசாளரின் செயலாளர் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பியதோடு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட செயற்பாட்டாளர்கள், தாய்மார்கள், மற்றும் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் ஆகியோரோடு வாய்த்தர்க்கத்தில ஈடுபட்டார். அவர்களைத் தாக்க முற்பட்டு எச்சரித்ததோடு ஆர்ப்பாட்டத்தையும் குழப்பினார்.











# "டெங்கை ஒழிப்போம்"

■ நூருல் ஹுதா உமர்

"ஒழிப்போம் ஒழிப்போம், டெங்கை ஒழிப்போம், இருப்போம், இருப்போம் சுத்தமாக இருப்போம்" எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் இணைந்து விழிப்புணர்வு நடைப்பவனியொன்று சாய்ந்தமருது வொலிவேரியன் பிரதேசத்தில் திங்கட்கிழமை (16) அன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.ஆரிஃப், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.வாசித் அகமத் அவர்களும் பங்குபற்றினர்.

இந்த நடை பவனியானது சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வீதியின் ஊடாக வொலிவேரியன் பிரதேசத்தைச் சுற்றி மீண்டும் சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் பாடசாலையினை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்புலுவாவ விபத்தில் ஒருவர் காயம்



கம்பளை, அம்புலுவாவ மலைத்தொடருக்குச் சுற்றுலா சென்ற நபர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து கம்பளை, அம்புலுவாவ பகுதிக்கு சிலர் ஞாயிற்றுக்கிழமை (15)சுற்றுலா வந்துள்ளதுடன் இதன்போதே வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஒருவருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த நபர் கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கழிப்பறை கொமடை திருடியவர் கைது

கழிப்பறை 'கொமடை' திருடிய ஒருவரை வெல்லவாய பொலிஸார் கடந்த 15 ஆம் திகதி கைது செய்துள்ளனர். வெல்லவாய பொலிஸ் பிரிவின் வேவல்வத்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்த, கழிப்பறை கொமடையே இவர் திருடியுள்ளார்.

வீட்டின் உரிமையாளரான 64 வயதுடையவர், தனது மகன் வசிக்கும் நாவலப்பிட்டி பகுதிக்குச் சென்றிருந்த நிலையில், வீட்டின் அருகே வசிக்கும் ஒருவர் கொமடை வைத்திருப்பதாகவும், அவர் சந்தேகத்திற்குரியவராக இருப்பதாகவும் முறைப்பாடு அளித்திருந்தார்.

அதன்படி, ஞாயிற்றுக்கிழமை (15) அன்று குறித்த வீட்டிற்குச் சென்று சோதனையிட்ட போது, வீட்டின் பின்புறக் கதவை உடைத்து , வீட்டிற்குள் நுழைந்த ஒருவர் கழிப்பறை கொமடை திருடிச் சென்றிருப்பது தெரியவந்தது. இந்த கழிப்பறை கொமடின் மதிப்பு முப்பத்தைந்தாயிரம் ரூபாயாகும்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்திய வெல்லவாய பொலிஸார், வெல்லவாய, திஸ்ஸா வீதியைச் சேர்ந்த 47 வயது சந்தேக நபரைக் கழிப்பறை கொமடுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர், வழக்குப் பொருட்களுடன் வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருக்கின்றார்.

# சுற்றி வளைப்பில் நால்வர் கைது

■ நிதர்ஷன் வினோத்

சுன்னாகம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, போதைப்பொருள் மற்றும் போதை குளிசைகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் டில்றுக் ஆகியோரின் வழிகாட்டுதலுக்கமைவாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராமநாயக்க மற்றும் சுன்னாகம் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி கலுமினால் குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இதன்போது 1,000 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 50 கிராம் ஹெரோயினுடன் 25 வயதுடைய இளைஞர் ஒருவரும், 4 போதைக் குளிசைகளுடன் இரண்டு இளைஞர்களும், 5 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# கொழும்பு – யாழ்., விமான சேவைக்கு அனுமதி

கொழும்பு, இரத்மலானை விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இடையே நேரடி உள்நாட்டு விமான சேவையை இயக்குவதற்கான, விமானக் செயல்பாட்டுச் சான்றிதழை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் (CAAS), டேவிட் பீரிஸ் எயார் லைன்ஸ் நிறுவனத்திற்குத் திங்கட்கிழமை (16) அன்று வழங்கியுள்ளது.

இந்த விமானப் பயணம் 01 மணி நேரம் 20 நிமிடங்கள் எடுக்கும், மேலும், இதற்காக செஸ்னா-280 விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்நாட்டுப் பயணிகளுக்கான முனையம் கட்டப்பட்டு



வருகிறதுடன், அதன் பணிகள் முடிந்ததும், வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

# சிறுமி பாலியல் வன்புணர்வு; காதலனின் நண்பன் கைது

■ சுமனசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுலந்தாவ பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய திருமணமான நபர் ஒருவர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்த மற்றொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமியின் காதலனின் நண்பரான 37 வயதுடைய ஒருவர் மற்றும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த மற்றொருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமி கடந்த 8ஆம் திகதியன்று மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்றுள்ளதுடன், அவர் வீடு திரும்பாததால் சிறுமியின் தாய் இது தொடர்பாக 9ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் சிறுமி 10ஆம் திகதி வீட்டிற்கு வந்ததையடுத்து, அவரது தாயார் மகளுடன் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவருவதாவது,

சிறுமி அவரது காதலனின் நண்பர்கள் இருவரைச் சந்திக்கத் தனது மூன்று தோழிகளுடன் பேருந்து நிறுத்துமிடத்தில் காத்திருந்த நிலையில், சிறுமியின் காதலனின் நண்பர்கள் இருவர், காதலன் அனுப்பிய பணத்துடன் வந்துள்ளனர். சிறுமியின் தோழிகள் பணத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுள்ளதுடன், சந்தேக நபருடன் வந்தவரும் அங்கிருந்து சென்றுள்ளார்.

சந்தேக நபர், இரவு 7.30 மணி வரை பேருந்து நிறுத்தத்தில் சிறுமியுடன் இருந்துள்ளதுடன், பின்னர் அவர் சிறுமியை அழைத்துக் கொண்டு முச்சக்கர வண்டியில், பாழடைந்த வீடொன்றுக்கு சென்றுள்ளார். அந்த வீட்டிலிருந்த நபருடன் தொடர்பு கொண்டதையடுத்து, அவர் இருவரையும் பின் கதவு வழியாக வீட்டிற்குள் அனுமதித்துள்ளார்.

அச்சிறுமி குறித்த வீட்டில் சந்தேக நபருடன் ஒரே அறையில் தங்கியுள்ளதுடன், இதன்போது பல தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஐஸுடன் ஜோடி கைது

கண்டி பொலிஸ் பிரிவில் தென்னகும்புர பகுதியில் உள்ள ஒரு ஹோட்டல் அறையில் தங்கியிருந்து ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பல நீதிமன்றங்களில் பிடியாணை பெற்றிருந்த தம்பதியினர் கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பலகொல்ல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் என்றும், பெண், குருநாகல் கெட்டுவான பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவரும் சிறிது காலம் ஹோட்டலில் தங்கியிருந்தபோது ஐஸ் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்து ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# புகையின் கீழ் நெருப்பு இருக்கிறது என்பதை நினைவில் கொள்க

மூன்றாவது உலகப் போர் எப்போதும் வெடிக்கும் சூழ்நிலை உலக நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவும் உக்ரைனும் போர் வெடித்த காலத்தில் மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது என்றே பலரும் நினைத்திருந்தனர். எனினும், அதற்கான சூழல் ஏற்படவில்லை. அவ்விரு நாடுகளுக்கும் இடையில் இன்றுமே போர் நடந்துகொண்டிருக்கின்றது. அப்பாவி மனித உயிர்கள் உட்பட பெருமளவில் சேதங்கள் ஏற்பட்டாலும். போருக்கு முற்றாக முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

தற்போது, ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கடுமையான மோதல் நிலவுகிறது. இஸ்ரேல் வைத்திருக்கும் ஆயுதங்கள் குறித்து வெளி உலகம் ஒருவித மதிப்பீட்டைக் கொண்டிருந்தாலும், ஈரானின் இராணுவ சக்தி மற்றும் அதன் அணு ஆயுதங்கள் குறித்து உலகிற்கு எந்த உணர்வும் இல்லை. எனவே, ஈரானை எப்படி எதிர்கொள்வது என்பது யாருக்கும் தெரியாது.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர் பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போரிலிருந்து வேறுபட்டது. பாலஸ்தீனத்தில் பழமையான ஆயுதங்களைத் தவிர வேறு அணு ஆயுதங்கள் இல்லை. எனவே, காசா பகுதியிலும் லெபனானிலும் உள்ள ஹமாஸ்களை இஸ்ரேல் மிக எளிதாகக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. அமெரிக்கா தாக்கினாலும் பதிலடி கொடுக்கும் நாடு ஈரான்.

மூன்றாம் உலகப் போருக்கான சூழல் பல ஆண்டுகளாக உருவாகி வருகிறது. அத்தகைய போர் சரியாகத் தொடங்க, சில நாடுகள் அணு ஆயுதத் தாக்குதலைத் தொடங்க வேண்டும். அங்கிருந்து, ஓர் அணு ஆயுதப் போர் தொடங்கும். இந்தப் போருக்குப் பிறகு, ஒரு சிலதே எஞ்சியிருக்கும்.

மூன்றாம் உலகப் போர் ஒரே நேரத்தில் நடக்காது. உலக நாடுகள் இரண்டு பக்கங்களாகப் பிரிந்து ஒரே நேரத்தில் சண்டையிடுவதில்லை. இது இரண்டு நாடுகளுடன் தொடங்குகிறது. அந்த இரண்டு நாடுகளுக்கு உதவ மற்ற நாடுகள் முன்வருகின்றன. மற்ற நாடுகள் அவர்களுக்கு உதவ முன்வருகின்றன. இந்த வழியில், இரண்டு பிரமிட் திட்டங்களைப் போல, உலக நாடுகள் இரண்டு பக்கங்களாகப் பிரிந்து, இரண்டு குழுக்கள் மட்டுமே எஞ்சியிருக்கும்

ஈரானும் இஸ்ரேலும் அத்தகைய இரண்டு நாடுகள். இந்த நேரத்தில், இந்த இரண்டு நாடுகளும் ஒன்றுக்கொன்று போரைத் தொடங்கியுள்ளன. இஸ்ரேல் அதிக எண்ணிக்கையிலான இராணுவ ஆயுதங்களைக் கொண்ட ஒரு பெரிய நாடு. ஈரான் ஒரு பெரிய நாடு, அதன் இராணுவ சக்தியை மதிப்பிட முடியாது.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஈரானுக்கும் ஈராக்கிற்கும் இடையே ஒரு போர் வெடித்தது. அந்தப் போர் இருபது ஆண்டுகள் தொடர்ச்சியாக நீடித்தது. எந்த நாடும் மற்ற நாடுகளிடம் சரணடைந்தது. இறுதியில், இரு நாடுகளும் மற்ற நாடுகளின் தலையீட்டால் வெற்றி அல்லது தோல்வி இல்லாமல் போரை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொண்டன.

ரஷ்யாவும் உக்ரைனும் மிகவும் கடுமையாகப் போராடுகின்றன. அதன்படி, மூன்றாம் உலகப் போர் ஏற்கனவே ஓரளவு தொடங்கிவிட்டது மூன்றாம் உலகப் போர் என்பது இன்னும் தொடங்காத ஒரு சிறிய புகை இந்தப் புகையின் கீழ் நெருப்பும் இருக்கிறது என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

காரிருளில் ஒளி தேவைப்படுகிறது. கும்மிட்டில் நடக்க, எல்லோருக்கும் பயம் வருவது இயற்கை. அதுபோல, இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்து விடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளி விடும். தன்னை மறந்து, புது உலகில்த் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும் செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சிவப்பு பாலத்தை உடைத்ததால் மக்கள் அவதி

இரத்தினபுரி மாவட்டம் ஓப்பநாயக்க பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட உடவெல பகுதியில் ‘வெ கங்கை’ ஆற்றின் குறுக்கே உள்ள சிவப்பு பாலம் வெள்ளையர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பாலம் சேதமாகியுள்ளதாகத் தெரிவித்து, அதனைப் புனரமைக்கப் போவதாகக் கூறி கடந்த 7ஆம் திகதி பாலத்தை உடைத்து அகற்றுவதற்கு பெல்மடுல்ல நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்காலிக பாலம் ஒன்று அமைக்காமல் குறித்த பாலத்தினை உடைத்து அகற்றியதால் பாலத்தினூடாக பயணிக்கும் அக்கரெல்ல, உடகம, பரகாமடித்த, பின்னகலகந்த, வல்லகெட்டிய, ரங்வல ஆகிய பகுதிகளில் உள்ள 500கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது..

அப்பகுதி மக்களால் வெ கங்கை ஆற்றைக் கடக்கக் குறித்த பகுதியில் தற்காலிக கம்பி பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், கடந்த ஒன்பதாம் திகதி அதனூடாக சிலர் பயணிக்கும் போது பாலத்தின் ஒரு கம்பி உடைந்து பாலம் தாழிறங்கியுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் மிக ஆபத்தான நிலையில், ஆற்றைக் கடந்தே பயணிக்கிறார்கள். எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– மஹிந்த குமார்



மனித உரிமை மீறல்கள் பற்றி

# வாயைத் திறக்குமா முஸ்லிம் சமூகம்?

மொஹமட் பாதுஷா

இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகின்றது. இதனை மையமாகக் கொண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையும் உலக நாடுகள் பலவும் பலதரப்பட்ட நகர்வுகளைச் செய்கின்றன. சரியோ பிழையோ, தமிழ்ச் சமூகம் இதற்கான ஓர் அழுத்தத்தைக் கொடுக்கின்றது.

மறுபுறத்தில் இலங்கையில் கடந்த காலங்களில் நடைபெற்ற படுகொலைகள், ஆட்கடத்தல்கள், சித்திரவதைகள், ஊழல்கள் பற்றிய புழுதி படிந்த கோப்புகள் மீளவும் புழுதி தட்டி எடுக்கப்படுகின்றன. பட்டலந்த போன்ற சில கோப்புகளைக் கையாள்வதில் புதிய அரசாங்கம் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும் ஏனைய பல அநியாயங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றது அல்லது அப்படியான ஒரு பிம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்த காலத்தில் அதிகம் பாதிக்கப்பட்டது சகோதர தமிழ்ச் சமூகம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், 50 வருடங்களுக்கும் மேலான இன முரண்பாடும் 30 வருட யுத்தமும் தமிழர்களுக்கு மட்டுமன்றி சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கும் இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு போன்ற சம்பவங்களில் கத்தோலிக்க சமூகமும் பாதிக்கப்பட்டது. மறுபுறத்தில் ஏதோ ஒரு விதத்தில் பொருளாதார ரீதியான அல்லது வர்க்க ரீதியான பாகுபாடுகள் காரணமாக மலையக தோட்டத் தொழிலாளர்களிற்குக் கூட இன்று வரை ‘நீதம்’ கிடைக்கவில்லை. எனவே, அனுரகுமார அரசாங்கத்தின் வருகை என்பது உண்மையிலேயே ஒரு ‘நிலைமாறு காலம்’ என்றால், நாட்டில் இடம்பெற்ற எல்லா விதமான அநீதிகளுக்கும் படிப்படியாக நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். இதற்கான அழுத்தத்தைத் தமிழர்கள், கத்தோலிக்கர்கள் பிரயோகித்து வருகின்றார்கள்.

ஆனால், யுத்த காலத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் அவ்வப்போது அரச படைகளாலும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், உரிமை மீறல்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுமாறு முஸ்லிம் அரசியல்வாதிகள், ஆளும் தரப்பு எம்.பிக்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் போதுமான அளவுக்குத் தொடர்ச்சியாக வலியுறுத்தவில்லை.

நீண்டகாலமாக சிங்கள இனவாதக் குழுக்கள், அரசியல் சக்திகளால் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநியாயங்கள் தொடர்பான கோப்புக்களை ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தூசிதட்டவும் இல்லை,

‘கொடூர யுத்தத்திலும் அதற்கு முன் - பின்னான காலங்களிலும் முஸ்லிம் தலைமுறைகள் எதிர்நோக்கிய படுகொலைகளும் மனித உரிமை மீறல்களும் பொறுப்புக் கூறல்கள் இன்றி காலப் பெருவெளியில் புதைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வெளிக்கொணர்வது நம்மீது திணிக்கப்பட்டுள்ள வரலாற்றுப் பொறுப்பாகும்’ என்று, ‘சாட்சியமாகும். உயிர்கள்’ ஆய்வு நூலின் ஆசிரியர் சர்ஜூன் ஜமால்டீன் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது சரிவர நடக்கவில்லை என்பதுதான் கவலை தரும் உண்மையாகும்.

இஸ்லாமோபோபியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள உலக நாடுகளும் இலங்கை முஸ்லிம்களின் இழப்புக்களைப் பெரிய விடயமாகப் பார்க்கவில்லை. பலஸ்தீன் வரை... பல முஸ்லிம் தேசங்கள் அழிக்கப்படுவதைக் கண்டுகொள்ளாத உலகம், பிடில் வாசித்துக் கொண்டிருக்கும் சவூதி போன்ற அரபு நாடுகளுக்கு இது ஒரு செய்தியாகக் கூட இருந்திருக்குமா என்பது சந்தேகமே.

தமிழர்கள் தமது வலிகளைச் சொல்லி பகிரங்கமாக அழுகின்றனர். முஸ்லிம்கள் உள்ளுக்குள் அழுது கொண்டிருக்கின்ற சமுதாயமாகவே பழக்கப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இதற்குப் பின்னால் பல தரப்புக்களின் பெரிய அரசியல் உள்ளது.

ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், சோடாப் போத்தலில் இருந்து வெளிவரும் ‘அழுக்கு வாயுவை’ போல, பெரும் வாதப் பிரதிவாதங்களை நடத்தி வீராப்பு பேச்சுக்களைப் பேசி விட்டு முஸ்லிம் சமூகம் அடங்கி விடுவதைக் காண முடிகின்றது.

எந்தவொரு விவகாரமும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கே முஸ்லிம் அரசியல்வாதிகளிடையேயும் சமூகத்தின் மத்தியிலும் பேசுபொருளாக இருக்கின்றது. இப்படியே பருவகால (சீசன்) அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள், பிரச்சினைகள் கையாளப்படுகின்றன.

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுத இயக்கங்களால் முஸ்லிம்கள் எதிர்கொண்ட மீறல்கள், இனக் கலவர காலங்களில் ஏற்பட்ட இழப்புகள், அரச படைகளால் ஏற்பட்டவை, இந்திய அமைதி காக்கும் படைகளின் கைங்கரியங்கள், கிளர்ச்சிகள் இடம்பெற்ற காலங்களில் முஸ்லிம்களுக்கு

> உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கு, நீதி கோருவதற்கு அல்லது சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு கடந்த காலத்தி;ல் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களும், முஸ்லிம் எம்.பி.க்களும் முயற்சிக்கவில்லை என்பது மிகப் பெரிய கைசேதமாகும். முஸ்லிம்களுக்கு எதிராக உரிமை மீறல்களே நடக்கவில்லை என்ற தோற்றப்பாட்டை இது ஏற்படுத்தியுள்ளது

ஏற்பட்ட பாதிப்புகள், இனவாத குழுக்கள் நிகழ்த்தியவை மற்றும் ஜனாஸா எரிப்பைக் கூட இந்த வகைக்குள் உள்ளடக்க முடியும்.

மீறல்களுள் முதன்மையானது வடக்கில் பூர்வீகமாக வாழ்ந்த முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு ஒரு சில மணிநேர அவகாசத்தில் அங்கிருந்து தமிழீழ புலிகளால் வெளியேற்றப்பட்டமை ஆகும். அதாவது ஒரு சிறுபான்மை இனத்தின் நிலமீட்புக்காக போராடிய குழு, இன்னுமொரு சிறுபான்மைச் சமூகத்தைச் சொந்த இடத்திலிருந்து இனச் சுத்திகரிப்புச் செய்த துயர் நிகழ்வு இது இது விடயத்தில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இறைவழிபாட்டுக்காக முஸ்லிம்கள் ஒன்றுகூடுகின்ற பள்ளிவாசல்களுக்குள் நடந்தேறிய உயிர் பறிப்புக்கள் மற்றுமொரு முக்கிய உரிமை மீறலாகும்.

அந்த விதத்தில் ஏறாவூர், காத்தான்குடி பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்தவர்கள் உயிர் பறிக்கப்பட்டனர். அக்கரைப்பற்று பள்ளிவாசலில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுடன் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் வேறு சில இடங்களிலும் வயல்களிலும் பொது இடங்களிலும் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

அழிஞ்சிப்பொத்தானை அழிவுகள், குருக்கள்மடத்தில் ஹஜ் யாத்திரிகர்கள் கொல்லப்பட்டமை, ஊறுகாமம் அசம்பாவிதம், அக்போபுர மரணங்கள், அத்துடன், கல்முனை வன்முறை, புதூர் படுகொலை, சாய்ந்தமருது குண்டுத் தாக்குதல், பள்ளித்திடல் படுகொலைகள் என இந்த சம்பவங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுதக் குழுக்கள் மற்றும் ஒட்டுக் குழுக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட கப்பம், ஆட்கடத்தல் என்று இன்னுமொரு பட்டியலையும் தொகுக்கலாம்.

இலங்கை, இந்தியப் படையினராலும் ஆங்காங்கு உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், இவை அடக்கி வாசிக்கப்பட்டன.

அரச படையில் பணிபுரிந்த முஸ்லிம்களை ‘சிவிலியன்களாக’ கருத முடியாது என்றாலும், அவர்கள் முஸ்லிம் என்பதற்காக தனியாக பிரித்தெடுக்கப்பட்டு கொல்லப்பட்ட ஐநூற்றுக்கு மேற்பட்ட பொலிஸாரின் மரணங்களும் இவ்விடத்தில் நினைவு கொள்ளப்படலாம்.

இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும்.

அதாவது, ஆரம்பத்தில் முஸ்லிம்கள் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மானசீக ஆதரவை வழங்கியது மட்டுமன்றி, பல முஸ்லிம் இளைஞர்களும் தமிழர்களின் வேட்கைக்காக இயக்கங்களில் இணைந்து களப் போராடினார்கள்.

ஆனால், மேற்குறிப்பிட்ட விதத்தில் முஸ்லிம்களை நோக்கி ஆயுதங்கள் திரும்பிய பிறகுதான், முஸ்லிம்கள் இந்த ஆதரவை விலக்கிக் கொண்டனர் என்பதை கவனிக்க வேண்டும். இதன் பிறுகுதான் முஸ்லிம் அரசியல் தனிவழியில் பயணிக்கத் தொடங்கியது என்பதும், தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவை முஸ்லிம் சமூகம் மீளப் பெற்றது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இது இவ்வாறிருக்க, சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் இடம்பெற்ற எழுச்சிகள் மற்றும் ஜூலைக் கலவரம் மற்றும் அழுத்கமை, திகண, அம்பாறை, வட மத்திய மாகாணத்தில் இடம்பெற்ற கலவரங்களும் முஸ்லிம்களின் மீது மீறல்களை விட்டுச் சென்றன. அதுமட்டுமன்றி, ஜனாஸா எரிப்பும் இந்தக் கண்ணோட்டத்தில் அணுகப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறான உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கு, நீதி கோருவதற்கு அல்லது சர்வதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு கடந்த காலத்தில் முஸ்லிம் அரசியல் கட்சித் தலைவர்களும், முஸ்லிம் எம்.பி.க்களும் முயற்சிக்கவில்லை என்பது மிகப் பெரிய கைசேதமாகும். முஸ்லிம்களுக்கு எதிராக உரிமை மீறல்களே நடக்கவில்லை என்ற தோற்றப்பாட்டை இது ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலை மாற வேண்டும். இலங்கையில் படுகொலைகள், ஆட்கடத்தல்கள், கப்பம் பெறுதல். இனச் சுத்திகரிப்புக்கு நீதி நிலைநாட்டப்படுமாக இருந்தால்... அதில் முஸ்லிம்களுக்கு எதிரான உரிமை மீறல்களும் உள்வாங்கப்படுவது கட்டாயமாகும். ஆதற்காக முஸ்லிம் சமூகம் இனிமேலாவ அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

# மலரன்பனுக்கு புகழாரம்







"மலரன்பனின் 'கொலுஷா' என்ற சிங்கள சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு தமிழ் - சிங்கள கலாசார நல்லிணக்கத்திற்கு முக்கிய பங்காற்றியுள்ளது. சிங்கள எழுத்தாளர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான மலரன்பனின் எழுத்துப்பணி பாராட்டிற்குரியதாகும். இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்கு எனது அமைச்சு எப்போதும் உதவத் தயாராக உள்ளது" என்று மாத்தளையில் ஜூன் 6-ம் திகதி நடைபெற்ற மலரன்பன் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு பௌத்த மத, சமய விவகார, கலாசார அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி உரையாற்றுகையில் தெரிவித்தார்.




மாத்தளை மகாத்மா காந்தி மண்டபத்தில் மலரன்பனுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் மலரன்பனின் 'கொலுஷா' சிறுகதைத் தொகுப்பின் மொழிபெயர்ப்பு பற்றி பெரிதும் சிலாகிக்கப்பட்டது. மாத்தளை இஸ்லாமியத் தமிழிலக்கிய பேரவையின் தலைவர் எம்.எம்.பீர். முகம்மது உரையாற்றும் போது மலரன்பனுக்கு கிடைத்த இலக்கிய அங்கீகாரம் மாத்தளைக்கு பெருமை சேர்த்திருக்கிறது என்று குறிப்பிட்டார்.

மாத்தளை கல்விப் பணிமனையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகரும், தேசிய கல்வி நிறுவகத்தின் வரலாறு பாடப் பகுதி நேர விரிவுரையாளருமான ஜெஸீமா ஹமீட் பேசுகையில் சிங்கள எழுத்தாளர்கள் இணைந்து தமிழ் எழுத்தாளரை இவ்வளவு விமர்சையாகப் பாராட்டி விழா எடுப்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். எனக்குத் தந்தை போல இருந்து என்னை எழுத்துத் துறையில் பயணிக்க மலரன்பன் அவர்களும் தூண்டுகோலாக இருந்தார் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தலைவர் சர்வானந்தா, விபுலானந்தர் மன்ற உறுப்பினர்கள், மாத்தளை சுபிட்சம் அமைப்பினர், மாத்தளை சைவ மகா சபையின் ஓம் சாந்தி பேரியக்கத்தின் பொறுப்பாளர் மாத்தளை எஸ்.சிவஞானம் அவர்கள், மாத்தளை மலரன்பன் கல்வி கற்ற கிறித்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டு மலரன்பனை வாழ்த்தி மகிழ்ந்தனர். விசேடமாக இவ்விழாவை ஏற்பாடு செய்த மாத்தளை சாகித்திய சங்ஸதய எனும் சகோதர மொழி இயக்கத்தின் தலைவர் காமினி உட்பட அதன் அனைத்து உறுப்பினர்களும் அனைவராலும் பாராட்டப்பட்டனர். இவர்களுக்கான விசேட நன்றியையும் பாராட்டுகளையும் எச் எச்.விக்ரமசிங்க அவர்கள் முன்வைத்தார்கள்.

மலரன்பனின் மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்பான 'கொலுஷா' என்ற பிறமொழி சிறுகதை நூல் உலகக் கதைகளின் ஒரு வெட்டு முகத்தைக் காண்பிக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கதைகளிலிருந்து அண்மைக்கால கதைகள் வரை நீண்டகால பதிவைத் தரிசிக்க இந்நூல் உதவுகிறது.

இக்கதைகளின் சமகாலத் தன்மை, இயல்பான மொழி, இறுக்கமான கட்டமைப்பு என்பன கதைகளுக்கு வலிமை சேர்க்கின்றன" என்று பேராசான் மு.நித்தியானந்தன் இந்நூலுக்கு வழங்கிய முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை சார்பில் எச்.எச்.விக்ரமசிங்க வெளியிட்ட 'கொலுஷா' 2023ஆம் ஆண்டிற்கான அரசு சாகித்ய மண்டலப் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# பாடகிக்கு பாலியல் தொல்லை

இந்திய திரையுலகின் முன்னணி பாடகிகளில் ஒருவரான கனடாவை சேர்ந்த பாடகி ஜொனிதா காந்தி, தமிழ், தெலுங்கு, ஹிந்தி, என பல்வேறு மொழிகளில் பாடி வருகிறார்.

மணிரத்னம் இயக்கிய 'ஓகே கண்மணி' படத்தில் "மெண்டல் மனதில்" பாடல் மூலம் தமிழ் திரையுலகில் கவனம் ஈர்த்த ஜொனிதா இசையமைப்பாளர் அனிருத்துடன் இணைந்து 'செல்லம்மா', 'அரபிக்குத்து' போன்ற சூப்பர் ஹிட் பாடல்களை பாடியுள்ளார்.

இந்நிலையில், அண்மைய நேர்காணல் ஒன்றில் பேசிய ஜொனிதா தனக்கு நேர்ந்த சில கசப்பான அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார்.

"ஒருமுறை இன்ஸ்டாகிராமில் என் நண்பர்களின் பதிவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு ஸ்டோரியை கண்டேன். அதில் ஒரு ஆண் தனது அந்தரங்க பகுதியை வெளிப்படையாகப் பகிர்ந்து, அதன் பின்னணியில் என் புகைப்படத்தை வைத்திருந்தார். இது எனக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது," என்று அவர் கூறியுள்ளார்.

"இது போன்றவர்களை நான் உடனடியாக பிளாக் செய்து விடுவேன். இத்தகைய சம்பவங்களை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதால், யாரும் மீது வழக்கு தொடரவில்லை. ஆனால், இவை அனைத்தும் பாலியல் சீண்டல்கள் தான். அதேபோல் பலர் எனக்குத் தொல்லை கொடுத்துள்ளனர்" என்று ஜொனிதா காந்தி தெரிவித்துள்ளார்.

# 'அஞ்சான்' ரீ-ரிலீஸ் எப்போது?






நடிகர் சூர்யா மற்றும் சமந்தா நடிப்பில், இயக்குநர் லிங்குசாமி இயக்கத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு வெளியான 'அஞ்சான்' திரைப்படம், கலவையான விமர்சனங்களைப் பெற்றது.

இந்த நிலையில், 'அஞ்சான்' படத்தின் ஹிந்தி உரிமையை வாங்கியவர்கள், படத்தை மறுபடியும் எடிட் செய்து ரிலீஸ் செய்தனர். அந்த பதிப்பு பார்ப்பதற்கு நன்றாக இருந்தது.

இதையடுத்து, அதேபோல் தமிழிலும் 'அஞ்சான்' திரைப்படத்தை ரீ-எடிட் செய்து வெளியீடு செய்யத் திட்டமிட்டுள்ளதாக இயக்குநர் லிங்குசாமி அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 'அஞ்சான்' திரைப்படம் மறுபடியும் சிறப்பாக எடிட் செய்யப்பட்டு, மீண்டும் ரிலீஸ் ஆக இருப்பது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுள்ளது.

11 ஆண்டுகளுக்குப் பின்னர் ரீ-ரிலீஸ் ஆகும் 'அஞ்சான்' திரைப்படம், இந்த முறை ரசிகர்களைக் கவருமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# வெட்கத்தில் சிவந்த ராஷ்மிகா



விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா மந்தனா இருவரும் காதலித்து வருவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் நடிகர் தனுஷ் குபேரா என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இதில் கதாநாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்க, தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர் நாகார்ஜுனா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

குபேரா படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்ச்சி ஐதராபாத்தில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில் நாகார்ஜுனா, தனுஷ், ராஷ்மிகா மந்தனா, இயக்குநர் சேகர் கம்முலா ஆகியோர் உட்பட படக்குழுவினர் பலரும் கலந்து கொண்டனர்.

குபேரா ப்ரீ ரிலீஸ் நிகழ்வில் விஜய் தேவரகொண்டா குறித்துக் கேட்கப்பட்ட கேள்வியால் நடிகை ராஷ்மிகா மந்தனா வெட்கத்தில் முகம் சிவந்தார்.

நிகழ்ச்சியில் தனுஷ் மற்றும் நாகர்ஜுனாவிடம் இருந்து எந்த விஷயங்களை எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்கள் என்று ராஷ்மிகாவிடம் கேள்வி எழுதப்பட்டது.

அதற்கு நாகர்ஜுனாவின் வசீகரத்தையும் தனுஷின் நடிப்பு, இயக்கம், நடனத்தையும் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, விஜய் தேவரகொண்டாவிடம் என்று கேள்வி எழுப்பியதற்கு வெட்கத்தில் முகம் சிவந்தபடி அனைத்தையும் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன் என்று ராஷ்மிகா கூறியுள்ளார்.




# பாலியல் கல்வி



பா.லோகேஸ்வரி,
உளவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**பாலியல் கல்வி என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை, இயற்கை மற்றும் அறிவாற்றலுடன் கூடிய பகுதியை நோக்கிச் செல்வது மட்டுமல்ல, மனித உரிமை, மதிப்பு, பாதுகாப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கிய மிக முக்கியமான அறிவுத்துறையாகும். இது ஒட்டுமொத்தமாக உடல் வளர்ச்சி, மனநிலை வளர்ச்சி, உறவுகள், சமூகப் பண்பாடு, பாலின அடையாளம், விருப்பங்கள், பாதுகாப்பான பாலியல் நடைமுறை போன்ற அனைத்தையும் அறிவிக்கும் ஒரு கல்வி வடிவமாகும்.**

இன்றைய நவீன உலகத்தில், தகவல் பெருக்கம் அதிகரித்து வரும் நிலையில், இளம் தலைமுறைக்கு உறுதியான, துல்லியமான, அறிவுத்திறனோடு கூடிய பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டிய அவசியம் அதிகரித்து வருகிறது. குறைந்த வயதிலேயே தவறான தகவல்களின் அடிப்படையில் உருவாகும் புரிதல் குறைபாடுகள், எதிர்காலத்தில் பலவிதமான சமூக, உடல் மற்றும் உளவியல் சிக்கல்களை உருவாக்கக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில், பாலியல் கல்வி என்பது வெறும் 'பாலுறவு' குறித்த தகவல்களை வழங்குவது மட்டுமல்ல, இளைஞர்கள் தங்களது உடலைப் புரிந்து கொள்ள, பரஸ்பர மரியாதையுடன் உறவுகளைக் கட்டியெழுப்ப, மற்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய திறன்களை வளர்த்தெடுக்க உதவும் முழுமையான வழிகாட்டியாகவும் இருக்கிறது.

பாலியற் கல்வி தேவையா இல்லையா என்பது பற்றிய சர்ச்சைகள் பரவலாகக் காணப்படுகிறதெனினும் அது ஓரளவுக்கேனும் பாடசாலை பாடத்திட்டத்தில் காணப்படுகிறது. எயிட்சின் தீவிர பரவல் பாலியற்கல்வியின் தேவையை அதிகரித்துள்ளது. ஆயினும் எந்த வயதில் பாலியற் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதிலும் எத்தகைய விடயங்கள் கற்பிக்கப்படலாம் என்பதிலும் சர்ச்சைகள் தொடர்கின்றன. பாலியல் என்றாலே பேசப்படக் கூடாத ஒரு விடயம் என்ற எண்ணப்பாடு சமுதாயத்தில் ஒவ்வொரு இளைஞர்கள், யுவதிகள் மத்தியிலும் காணப்பட்டு வருகின்ற மிக முக்கியமான விடயமாக உள்ளது.

ஆனால், அது தவறு. பாலியல் என்றால் என்ன? பாலியல் கல்வி என்றால் என்ன? என்பது தொடர்பில் ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். பாலியல் கல்வி என்றால், ஒருவரின் உடல் வளர்ச்சி, பாலுறவு, உறவுகள், மனநிலை, பாதுகாப்பு, தனிநபர் உரிமை, பிறப்புத்தடுப்பு மற்றும் பாலியல் வழியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து விஞ்ஞான மற்றும் சமூக அடிப்படையில் வழங்கப்படும் விழிப்புணர்வும் ஆகும். இது குழந்தைகள் மற்றும் இளம் வயதினர்களுக்கு அவர்களது உடல் மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கும், தங்கள் உடலை மதிப்பதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும், உறவுகளை முறையாகப் புரிந்து கொள்வதற்கும் உதவுகிறது. பாலியல் கல்வி, தவறான தகவல்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், தவறான உறவுகளில் சிக்காமல் இருக்கவும் வழிகாட்டும். நேர்மையான பாலியல் கல்வி, ஒழுக்கத்தையும் மரியாதையையும் வளர்க்கும். இது பள்ளி, குடும்பம் மற்றும் சமூக மூலமாக வழங்கப்பட வேண்டும்.

பாலியல் கல்வி என்பது மாணவர்கள், இளவயதினர் மற்றும் இளைஞர்கள் தங்கள் உடல், மனம் மற்றும் சமூக உறவுகள் குறித்துத் தெளிவாகவும் பாதுகாப்பாகவும் அறிந்து கொள்ளும் வகையில் வழங்கப்படும் அறிவியல் அடிப்படையிலான ஒரு கல்வி முறையாகும். இது வெறும் பாலுறவு பற்றியதல்ல. இது விரிவாக மனித உறவுகள், நெறிமுறைகள், உடல் மாற்றங்கள், உரிமைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய புரிதலை அடக்கியதாக உள்ளது. பாலியல் கல்வியின் முதன்மையான பகுதிகளில் ஒன்று, உடல் வளர்ச்சி. இளவயதினரின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் அதாவது மாதவிடாய், ஈர்ப்பு உணர்வுகள், ஹோர்மோன் மாற்றங்கள், இருபாலருடனான வித்தியாசங்கள் உள்ளிட்டவை பற்றித் தெளிவாக எடுத்துரைக்கப்படும். இது, அவர்கள் தங்களின் உடலை மதிக்கவும், இயற்கையான வளர்ச்சியைக் கொண்டே உருவாகும் மாற்றங்களை ஏற்கவும் உதவுகிறது.

இதே நேரத்தில், உறவுகள் மற்றும் உணர்வுகள் பற்றியும் இது பேசுகிறது. அன்பு, ஈர்ப்பு, நெருக்கம், நம்பிக்கை, சுய மரியாதை, மற்றும் தனிமனித உரிமைகள் பற்றி விவரிக்கப்படும். பாலியல் உறவுகள் என்பது உணர்வுகளை மட்டுமல்ல, பொறுப்பையும் கொண்டுள்ளது என்பதை இவ்வகை கல்வியானது எடுத்துரைக்கின்றது. பாதுகாப்பு என்பது பாலியல் கல்வியில் அடிக்கடி வலியுறுத்தப்படும் துறையாகும். பிறப்புத்தடுப்பு முறைகள், பாலியல் பரவல்களிலிருந்து பாதுகாப்பு, பாதுகாப்பான பாலுறவுகள் மற்றும் விருப்பமின்றி நிகழும் தொடர்புகளிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்வது போன்றவையும் இதில் அடங்கும். இது, மாணவர்களுக்கு 'ஆம்' மற்றும் 'இல்லை' என்பதற்கான உரிமையை அறிவிக்கும். பாலியல் உறவுகளில் ஒத்துழைப்பு, மதிப்பு மற்றும் சமத்துவம் போன்ற சமூகக் கோட்பாடுகளும் இதில் கற்பிக்கப்படுகின்றன. பாலியல் சிதைவு, பாலியல் வன்முறை, பிள்ளை வயதில் கர்ப்பம், பாலியல் முறைகேடுகள் ஆகியவற்றிலிருந்து விழிப்புணர்வையும் இது ஏற்படுத்துகிறது.






மேலும், இலிங்க அடையாளம், பால் புணர்ச்சி அடையாளம், பாலின சமத்துவம் ஆகிய விரிவான சமூக மற்றும் உளவியல் விடயங்களும் தற்போது பாலியல் கல்வியில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இது, மாணவர்களை வேறுபாடுகளை ஏற்கும் மனநிலைக்குத் தயார்ப்படுத்துகிறது. மொத்தத்தில், பாலியல் கல்வி என்பது ஒரு நாகரீக சமூகத்தின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மரியாதை மிக்க உறவுகளுக்கான அடித்தளமாக அமைகிறது. இது தவிர்க்க வேண்டிய ஒன்று அல்ல. வெளிப்படையாக, பொறுப்புடன், குழந்தைகளின் வயதிற்கேற்ப வழங்கப்பட வேண்டிய ஒரு அவசியமான கல்வி ஆகும். இன்றைய சமுதாயத்தில் பாலியல் கல்வியின் தேவைப்பாடு மிக முக்கியமான நிலையில் காணப்படுகின்றது. இளவயதில் பாலுறவு, தவறான தகவல்களால் பாதிக்கப்படும் மாணவர்கள், குழந்தை பாலியல் சிதைவு, இளவயது கர்ப்பம், பாலியல் நோய்கள் பரவல், மனநல சிக்கல்கள் போன்ற பல பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இவை அனைத்தும் ஒரு காரணத்தால் முறையான, அறிவியல் அடிப்படையிலான பாலியல் கல்வி இல்லாமையால் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக, ஒரு 15 வயது மாணவி, தனது உடலில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து கொள்ளாமல் தவறான உறவுகளில் ஈடுபட்டு, பின்னர் மன அழுத்தம் மற்றும் பள்ளி விலகு நிலைக்குத் தள்ளப்படுவது, பாலியல் கல்வி இல்லாததின் நேரடி விளைவாகும். மேலும், சிலர் சமூக வலைத்தளங்கள், நண்பர்கள் மூலம் தவறான பாலியல் தகவல்களைப் பெறுகின்றனர். இவை, அவர்களது உணர்ச்சி வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் பாதிக்கக்கூடியதாக இருக்கின்றன. பாலியல் சிதைவு நிகழும் போது பல மாணவர்கள் அதனைத் தவறானது என்றும் பாதிக்கப்படுவது என்றும் உணர முடியாமல், தாங்களே தவறு செய்தோம் எனக் குற்ற உணர்வுடன் வாழும் நிலையும் நிலவுகிறது. இதற்குக் காரணம் அவர்கள் உரிமைகள், உடலின் தனிப்பட்ட பரிமாணங்கள், இல்லை என்ற சொல்லின் சக்தி போன்றவற்றைப் பற்றி முன்னதாகக் கற்றுக்கொள்ளாததால்.

இளவயது கர்ப்பம் குறிப்பாக வறுமை மற்றும் கல்வி குறைவுள்ள பகுதிகளில், இன்னும் அதிகம் காணப்படுகிறது. இது மாணவிகளின் கல்வியையும் எதிர்காலத்தையும் பாதிக்கும். சரியான பாலியல் கல்வி வழங்கப்படுமானால், பாதுகாப்பான பழக்கங்கள், பிறப்புத்தடுப்பு, மற்றும் உடல்நலம் தொடர்பான முடிவுகள் எடுக்க உதவும். இன்றைய டிஜிட்டல் உலகில், குழந்தைகள் இணையவழியில் பல வகையான தகவல்களைப் பெறுகிறார்கள். இந்நிலையில், பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்கள் முன்வந்து நேர்மையாக பாலியல் கல்வி வழங்காவிட்டால், தவறான வழிகாட்டலால் திசைதிருப்பப்படுவார்கள். எனவே, இன்றைய சமுதாயத்தில் பாலியல் கல்வி என்பது இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பிற்கும், மனநலத்திற்கும், ஒழுக்கத்திற்கும், நல்ல எதிர்காலத்திற்கும் மிகவும் அவசியமானதாக உள்ளது.

இலங்கையில் பாலியல் கல்வியின் பங்களிப்பு மெதுவாக வளர்ந்து வருவதுடன், சமூக மற்றும் கல்வி அமைப்புகளில் அதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையைக் கண்கூட காணக்கூடியதாக உள்ளது. பல்வேறு நன்மைகளையும் சவால்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த பங்களிப்பு சமீப காலங்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

இலங்கையின் கல்விக் கொள்கையில், *'Life Skills'* என்ற பாடத்திட்டத்தில் பாலியல் மற்றும் மனித உறவுகள் தொடர்பான உள்ளடக்கங்கள் அடங்கியுள்ளன. இது மாணவர்களுக்கு அவர்களது உடல் வளர்ச்சி, மாதவிடாய், பாலின வேறுபாடு, பாதுகாப்பு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துகிறது. குறிப்பாக, உடல்நலம் மற்றும் உடற்கல்வி பாடங்களில், பாலியல் வளர்ச்சி மற்றும் தனிநபர் பாதுகாப்பு குறித்த சில அடிப்படை கருத்துகள் இடம்பெறுகின்றன. இது தவிர, சுகாதார அமைச்சும், பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சும், பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்த முயற்சி செய்கின்றன. குறிப்பாக பாலியல் வன்முறைகள், குழந்தை துஷ்பிரயோகம், மற்றும் இளவயது கர்ப்பம் போன்றவை அதிகரிக்கும் போது, இந்த கல்வியின் முக்கியத்துவம் அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் பாலியல் கல்வி தொடர்பான முழுமையான, திறந்த மனப்பான்மையுடன் வழங்கப்படும் திட்டங்கள் இன்னும் பூரணமாக நடைமுறைக்கு வரவில்லை. கலாச்சார, மதவியல் மற்றும் சமூக நெறிமுறைகள் காரணமாக, சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் திறந்தவெளி உரையாடலுக்குத் தயங்குகின்றனர். இது ஒரு முக்கியமான சவாலாகவே உள்ளது. அதற்கிடையே, NGO அமைப்புகள் மற்றும் சமூக சேவைகள் துறைகள் வழியாக, மாதவிடாய் விழிப்புணர்வு, தன்னம்பிக்கை வளர்ப்பு, மற்றும் பெண்கள் பாதுகாப்பு போன்ற அம்சங்களில் பாலியல் கல்வியின் பகுதிகளை சில பள்ளிகளுக்குள் கொண்டு வருகின்றன. இது மாணவர்களின் அறிவை மேம்படுத்துவதோடு, தங்களைப் பாதுகாக்கும் திறனையும் ஊக்குவிக்கிறது.

மொத்தத்தில், இலங்கையில் பாலியல் கல்வி ஒரு வளர்ந்து வரும் பிரிவாகும். இது மாணவர்களின் உணர்ச்சி நலம், பாதுகாப்பு, சமூக ஒழுங்கு, மற்றும் எதிர்கால முடிவுகள் என பல தளங்களில் நேரடியாகப் பங்களிக்கிறது. முழுமையான பங்களிப்பு பெற, பள்ளிகள், பெற்றோர்கள், அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. இது ஒவ்வொரு பள்ளியிலும், வீட்டிலும் திறந்த மனதுடன், வயதிற்கேற்ப அளிக்கப்பட வேண்டிய ஒரு அறிவாகும். பாலியல் கல்வியைச் சிறந்த முறையில் வழங்குவது ஒவ்வோர் ஆசிரியரதும் பெற்றோர்களதும் மிக முக்கிய கடமையாக காணப்படுகின்றது.

இஸ்ரேல்

## ட்ரம்பை
# கொல்லத் திட்டம்?

ஈரான் அரசு தங்கள் அணு ஆயுத தயாரிப்பு திட்டத்தின் முதல் எதிரியாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை கருதுவதாகவும், டொனால்ட் ட்ரம்ப்பை கொல்வதற்கு ஈரான் திட்டமிட்டுள்ளதாகவும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது,

“டொனால்ட் ட்ரம்ப் ஒரு தீர்க்கமான தலைவர். ஈரான் அரசிடம் பேரம் பேசுவதற்கான பாதையை ட்ரம்ப் தேர்ந்தெடுக்கவில்லை. போலி ஒப்பந்தத்தை அவர் கிழித்தெறிந்தார். காசிம் சுலைமானியை கொலை செய்தார். ஈரான் அரசிடம் அணு ஆயுதம் இருக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியாக உள்ளார். எனவே ஈரான் அரசு ட்ரம்ப்பை தனது முதல் எதிரியாக கருதுகிறது.

ஈரானின் அணு ஆயுத திட்டத்தை எதிர்ப்பதில் ட்ரம்பின் ‘இளைய கூட்டாளி’ போல் நான் இருக்கிறேன். எனவே, ஈரான் என்னையும் குறிவைத்துள்ளது. எனது படுக்கையறை ஜன்னல் அருகே ஏவுகணை வீசப்பட்டது. இஸ்ரேல் தற்போது அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகிறது. எனவே ஆக்ரோஷமாக செயற்படுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. அணுசக்தி மற்றும் ஏவுகணை அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்தையும் செய்ய இஸ்ரேல் தயாராக உள்ளது” என்றார்.

தாய்வான்

## சீன நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்ய
# தாய்வானில் கட்டுப்பாடு

மெரிக்காவுக்கு ஆதரவாக, சீனாவின் ஹவாய் டெக்னாலஜீஸ், சர்வதேச செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனம் போன்றவை ஏற்றுமதி கட்டுப்பாடு பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.




சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் 1949இல் தனி நாடாகப் பிரிந்து சென்றது. அதனை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா துடிக்கிறது. இதற்காக தாய்வான் எல்லைக்குள் போர்க்கப்பல் மற்றும் விமானங்களை அனுப்பி பதற்றத்தைத் தூண்டுகின்றது. அதேபோல் வேறு எந்த நாடுகளும் தாய்வானுடன் தூதரக உறவு வைத்துக்கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆனால், சீனாவின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் தாய்வானுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படுகிறது. இதற்கிடையே அமெரிக்கா-சீனா இடையேயான வர்த்தக போர் அதிகரித்து வருகிறது.

இதனையடுத்து, அமெரிக்காவுக்கு ஆதரவாக சீனாவின் ஹவாய் டெக்னாலஜீஸ், சர்வதேச செமிகண்டக்டர் உற்பத்தி நிறுவனம் போன்றவற்றை ஏற்றுமதி கட்டுப்பாடு பட்டியலில் சேர்த்துள்ளது.

இதனால் அந்த நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்யும் முன்பு அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அதேபோல் தலீபான், அல்-கொய்தா போன்ற அமைப்புகளும் இந்த தடை பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜம்மு-காஷ்மீர்

## 2 மாதங்களுக்கு பிறகு
# சுற்றுலா தலங்கள் திறப்பு

ஜம்மு-காஷ்மீரில் 2 மாதங்களுக்குப் பிறகு சுற்றுலாத் தலங்கள் செவ்வாய்க்கிழமை (17) முதல் திறக்கப்படும் என துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா தெரிவித்துள்ளார்.



கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, மாநிலம் முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தற்காலிகமாக மூடப்பட்டன. இதனால், காஷ்மீருக்கு சுற்றுலா செல்ல திட்டமிட்டிருந்தவர்கள் தங்கள் பயணத்தை இரத்து செய்தனர். இதனால் அம்மநில சுற்றுலாத் துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. வைஷ்ணவ தேவி கோயிலுக்கான ஆன்மிக யாத்திரையும் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, சுற்றுலாத் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் ஜம்மு காஷ்மீர் அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, முதல்வர் உமர் அப்துல்லா கடந்த மாதம் அமைச்சரவை கூட்டத்தை பஹல்காம் பகுதியில் நடத்தினார். அத்துடன், சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட்டார்.

சுற்றுலாத் தலங்களை மீண்டும் திறக்க வேண்டும் என காஷ்மீர் அமைச்சரவை அழைப்பு விடுத்திருந்தது. எனினும், இதுகுறித்து இறுதி முடிவு எடுப்பதற்கான அதிகாரம் துணைநிலை ஆளுநரிடம் இருந்தது.

இந்நிலையில், துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, காஷ்மீர் மற்றும் ஜம்மு பிராந்தியத்தில் உள்ள சில சுற்றுலாத் தலங்களை மீண்டும் திறக்க உத்தரவிட்டுள்ளார்.



ஈரான்

# “அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸை தாக்குவோம்”
## ஈரான் எச்சரிக்கை

இஸ்ரேல் மீதான தாக்குதல்களைத் தடுத்தால், அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாட்டின் கப்பல் மற்றும் முகாம்களை குறிவைத்து தாக்குவோம் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானில் உள்ள அணுசக்தி நிலையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்திய நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பை குறிவைத்து கடந்த 2023ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸிற்கு ஆதரவாக ஈரான் செயல்படும் நிலையில், அந்நாட்டில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் நடத்தி வந்தது.

இந்நிலையில், ஈரானின் அணு ஆயுத திட்டங்களை கைவிடச் செய்யும் வகையில், அமெரிக்கா நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த சூழலில், ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், ஈரான் புரட்சிப்படை தளபதி ஹோசைன் சலாமி, 2 அணு ஆயுத விஞ்ஞானிகள் உட்பட 4 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.




## கழக உலகக் கிண்ணம்
# அத்லெட்டிகோவை வீழ்த்திய பரிஸ் ஸா ஜெர்மைன்

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன கழக உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவில் திங்கட்கிழமை (16) அதிகாலை நடைபெற்ற ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான குழு பி போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக பேபியன் ருய்ஸ், வித்தின்ஹா, சென்னி மயுலு, லீ கங்-இன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# சர்வதேச மோட்டார் பந்தயத்துக்காக ஹம்தான் பயணம்



எம்.யூ.எம்.சனூண்

புத்தளம் கொத்தான்தீவைச் சேர்ந்த கமால்தீன் ஹம்தான் சர்வதேச மோட்டார் சைக்கிள் ஓட்ட பந்தயத்தில் கலந்து கொள்வதற்கு வெள்ளிக்கிழமை (13) இங்கிலாந்து பயணமானார்.

இலங்கையில் தேசிய மட்டத்தில் பல்வேறு மோட்டார் சைக்கிள் ஓட்ட பந்தயங்களில் பங்குபற்றி வெற்றிவாகை சூடியவர் ஹம்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கனேடிய குரான் பிறீ:
# வென்றார் ரஸல்



கனேடிய குரான் பிறீயை மெர்சிடீஸ் அணியின் ஜோர்ஜ் ரஸல் வென்றார்.

பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்து பிரித்தானியாவின் ரஸல் வென்ற நிலையில். பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த நடப்பு போர்மியுலா வண் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த மெர்சிடீஸின் மற்றைய ஓட்டுநரான கிமி அன்டொனெல்லி மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இவ்வாண்டுக்கான சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் மக்லரென் அணியின் ஒஸ்கார் பியாஸ்திரி 198 புள்ளிகளுடன் முதலாமிடத்திலுள்ளார். மக்லரென் அணியின் மற்றைய ஓட்டுநரான லான்டோ நொரிஸ் 176 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் 155 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலுமுள்ளார்.

# அயர்லாந்துக்கு எதிரான தொடரை வென்ற மே. தீவுகள்

அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளும் கைவிடப்பட்ட நிலையில், பிறெடியில் ஞாயிற்றுக்கிழமை(15) நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையையடுத்தே 1-0 என்ற ரீதியில் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து,

மே. தீவுகள்: 256/5 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: எவின் லூயிஸ் 91 (44), ஷே ஹோப் 51 (27), கேசி கார்ட்டி ஆ.இ 49 (22), றொமாரியோ ஷெப்பர்ட் ஆ.இ 19 (06), ஜேஸன் ஹோல்டர் 18 (13), ஷிம்ரோன் ஹெட்மயர் 15 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: மத்தியூ ஹம்ப்பிறேய்ஸ் 2/16 [4])

அயர்லாந்து: 194/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஸ் அடைர் 48 (36), ஹரி டெக்டர் 38 (25), மார்க் அடைர் ஆ.இ 31 (14), லியம் மக்கார்தி ஆ.இ 16 (15), ஜோர்ஜ் டொக்ரல் 15 (08), போல் ஸ்டேர்லிங் 13 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: அகீல் ஹொஸைன் 3/27 [4], றொமாரியோ ஷெப்பர்ட் 1/23 [3], றொஸ்டன் சேஸ் 1/16 [2])

போட்டியின் நாயகன்: எவின் லூயிஸ்.



## பங்களாதேஷுக்கு எதிரான தொடரில்
# இலங்கைக் குழாமில் சதீர, விஷ்வ இல்லை



பங்களாதேஷுக்கெதிரான டெஸ்ட் குழாமில் விஷ்வ பெர்ணாண்டோ, நிஷான் பீரிஸ், ஜெஃப்ரி வன்டர்சே, சதீர சமரவிக்கிரம நிஷான் மதுஷ்க ஆகியோர் இடம்பெறவில்லை. இந்நிலையில், லஹிரு உதார, சொனால் டினுஷ, பசிந்து சூரியபண்டாரா, பவன் ரத்னாயக்க, தரிந்து ரத்னாயக்க, இசித விஜேசுந்தர என ஆறு புதுமுகங்கள் இடம்பெற்றுள்ளனர்.

காயம் காரணமாக லஹிரு குமார குழாமில் இடம்பெறவில்லை.

இதேவேளை அகில தனஞ்சய குழாமுக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

குழாம்: தனஞ்சய டி சில்வா (அணித்தலைவர்), பதும் நிஸங்க, ஒஷாத பெர்ணாண்டோ, லஹிரு உதார, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், கமிந்து மென்டிஸ், குசல் மென்டிஸ், பசிந்து சூரியபண்டார, சொனால் டினுஷ, பவன் ரத்னாயக்க, பிரபாத் ஜெயசூரிய, தரிந்து ரத்னாயக்க, அகில தனஞ்சய, மிலான் ரத்னாயக்க, அசித பெர்ணாண்டோ, கசுன் ராஜித, இசித விஜேசுந்தர.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 17, ஜூன் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது